செ.வெ.எண் : 946/2017 நாள்: 09.12.2017

# கர்நாடகவில் கரை சேர்ந்த 129 படகுகளில், 453 மீனவர்கள் தமிழகம் திரும்புகின்றனர்

ஒகி புயலால் பாதிக்கப்பட்டு, தமிழகத்தின் அருகாமை கடற்கரைப் பகுதியான கர்நாடகாவில் கரை சேர்ந்துள்ள தமிழக மீனவர்களை மீட்டு, பாதுகாப்பாக தமிழகத்திற்கு அழைத்து வருவதற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு கைவினைஞர்கள் மேம்பாட்டு கழகத் தலைவர் டாக்டர்.A.சந்தோஷ் பாபு, இ.ஆ.ப., அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், கர்நாடகா மாநில கடற்கரை பகுதிகளான மால்பே (MALPE) பகுதியில் 120 படகுககளில் 327 மீனவர்களும், கார்வார் (KARWAR) பகுதியில் 9 படகுகளில் 126 மீனவர்கள் என மொத்தம் 129 படகுகளில் 453 மீனவர்கள் கரை சேர்ந்தனர். இந்நிலையில் இன்று (09.12.2017) இம்மீனவர்கள் மற்றும் படகுகளை பாதுகாப்பாக அரவரர் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைப்பதற்கான பணிகள், தமிழ்நாடு கைவினைஞர்கள் மேம்பாட்டு கழகத் தலைவர் டாக்டர்.A.சந்தோஷ் பாபு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மேலும் அவர் தெரிவிக்கும் போது:

தற்போது, 453 மீனவர்களுக்கும் உடனடி நிவாரண உதவித்தொகையாக தலா ரூ.2,000/- வீதம், மொத்தம் ரூ.9,06,000/- வழங்கப்பட்டு, மருத்துவ பரிசோதனை, உணவு வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அனைத்தும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மீனவர்களின் படகுகளுக்கு தேவையான எரி பொருள் வழங்கப்பட்டு, அவரவர் சொந்த மாவட்டங்களுக்கு செல்வதற்கு தமிழக அரசின் சார்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

அண்டை மாநிலங்களின் கடற்கரை பகுதிகளில் கரை சேர்ந்து தமிழம் திரும்பும் மீனவர்களை, அவரவர் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கும் பணிகளை மீன்வளத்துறை இயக்குநர் திரு.வி.பி.தண்டபானி,இ.ஆ.ப., மற்றும் மீன்வளத்துறை கூடுதல் இயக்குநர் திரு.சமீரன்.இ.ஆ.ப., ஆகியோர் கன்னியாகுமரி மாவட்டத்தில் முகமிட்டு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**